தமிழ்ச் சிட்டு

ஆடுக ஊஞ்சல்!

அன்புப் பாப்பா
அழகுப் பாப்பா
ஆடுக ஊஞ்சல்!
அசையும் காற்றின்
திசையில் நீந்தி
ஆடுக ஊஞ்சல்!
இன்பத் தமிழே
எழிலோ வியமே
ஆடுக ஊஞ்சல்!
இளமைக் கால்கள்
வளமை பொலியும்
ஆடுக ஊஞ்சல்
வானில் அலையும்
வட்ட நிலாவே
ஆடுக ஊஞ்சல்!
வனப்பும் உரமும்
நினைவும் பெருகும்
ஆடுக ஊஞ்சல்!
மானின் கன்றே
மகிழம் பூவே
ஆடுக ஊஞ்சல்!
மழைபோல் கூந்தல்
தழைந்து கருக்கும்
ஆடுக ஊஞ்சல்!
துள்ளும் அலையே
துடிக்கும் விழியே
ஆடுக ஊஞ்சல்!
தோன்றும் இன்பம்
ஊன்றும் எழிலும்
ஆடுக ஊஞ்சல்!
எள்ளின் பூவே
இசைக்கும் குயிலே
ஆடுக ஊஞ்சல்!
இடையும் சிறுக்கும்
இருவிழி குளிரும்
ஆடுக ஊஞ்சல்!

குரல் : 8 விலை
இசை : 1 35 காசு.

பொன்னன் கதை!

பொன்னன் ஒருநாள் தெருவழியே
போய்க்கொண் டிருந்தான்; அவன்முன்னே
நன்னன் வந்தான்; அவன் இவனை
நாடகம் பார்க்கக் கூப்பிட்டான்!

இருவரும் நாடகம் பார்த்தார்கள்!
இரவில் வீடு திரும்புகையில்
ஒருவன் வந்தான்; "பொன்னு! உன்
உறவினர் ஒருவர் இறந்தாராம்;

செய்தியைக் கேட்டே உன்பெற்றோர்
செங்கற் பட்டு சென்றுள்ளார்;
பொய்யிலை; உன்னை என்னோடு
புறப்பட் டங்கே வரச்சொன்னார்;

எடு; எடு; போவோம்" என்றழைத்தான்!
இவனைத் தெரியான் அவனெனினும்
விடுவிடு என்றே நன்னனையும்
வீட்டிற் கனுப்பிப் புறப்பட்டான்!

பெற்றோர் பொன்னனைக் காணமல்
பெரிதும் வருந்தினர்; அங்கங்கே
உற்றார் உறவினர் ஊரிலெல்லாம்
ஓடினர்; தேடினர்; பயனில்லை!

நாட்கள் மூன்று நடந்தனவே!
நன்னனும் செய்தியை அவர்க்குரைத்தான்!
ஆட்கள் பலரும் திசைக்கொருவர்
அவனைத் தேடி அலைந்தனரே!

இப்படி யிருக்கையில் ஒருநாளில்
எங்கிருந் தோஒரு மடல்வரவே
அப்பா அம்மா பிரித்தார்கள்!
அதிலே பொன்னன் வரைந்திருந்தான்!

(தொடர்ச்சி 3ஆம் அட்டைப் பக்கம் பார்க்க)

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்-8. — தி. பி. உ௲௫. — துலை (அக். - நவ. 74). — இசை-1.

பரந்து வாழுங்கள்!

நம்மவர்கள் எப்பொழுதும் ஒரே இடத்திலேயே வாழ விரும்புகிறார்கள். ஒரு குடும்பத்தில் உள்ள ஆடவர்களும் பெண்டிர்களும் பெரும்பாலும் அருகருகிலேயே, அல்லது அண்டை அயல் ஊர்களிலேயே வாழ விரும்புகின்றனர். ஆண்களும் பெண்களும் தங்கள் தங்கள் உறவினர்களுக்குள்ளாகவே திருமணங்கள் செய்துகொள்ள விழைகின்றனர். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைத் தொலைவில் உள்ளவர்களுக்குத் திருமணம் செய்து கொடுக்க விரும்புவதில்லை. அருகில் உள்ள ஊர்களிலேயே அவர்களுக்கு மணமக்களைத் தேர்ந்தெடுக்க முற்பட்டு விடுகின்றனர். அடிக்கடி அவர்களைப் போய்ப் பார்த்துவர அதுவே அவர்களுக்கு ஏந்தாக இருப்பதாகச் சொல்லுகின்றனர்.

தங்கள் பிள்ளைகளைப் படிக்க அனுப்பவேண்டுமானாலும் அவர்கள் தொலைவில் உள்ள ஊர்களுக்கு அனுப்புவதில்லை. அக்கம் பக்கத்தில் உள்ள பள்ளிகளிலோ, கல்லூரிகளிலோ இடந்தேடி அலைகிறார்கள். நூறு இருநூறு கற்களுக்கு அப்பால் உள்ள ஊர்களில் போய்

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. தமிழகம்.

அவர்கள் படிப்பதானுல் அவர்கள் விடுவதில்லை. எப்பொழுதும் தங்கள் பிள்ளைகளைத் தங்கள் பக்கத்திலேயே வைத்துக் கொள்ள ஆசைப் படுகிருர்கள். இதனுல் அந்தப் பிள்ளைகளுக்கு உலக அறிவே ஏற்பட வழியில்லாமல் போய் விடுகின்றது. அவர்களுக்குத் தங்கள் பெற்ருேர்கள்பாலும் உற்ருர் உறவினர்கள்பாலுமே பற்று, பாசம் ஏற்பட்டு விடுகின்றது. மற்ற மக்களை அவர்கள் அணுகுவதற்கே விரும்புவதில்லை. எனவே அவர்களை வேருகவே கருதி அஞ்சி ஒதுங்கிக் கொள்ளும் உணர்வு வந்து விடுகின்றது.

தங்கள் தங்கள் பெற்ருேர்கள் பாங்கிலேயே இருந்து பழகிப் போன பிள்ளைகள் எப்பொழுதும் கோழைகளாகப் போய்விடு கிருர்கள். பிற மக்களைக் கண்டு அவர்களுடன் பழகவும் அச்சம் கொள்கின்ருர்கள். வாழ்க்கைப் போராட்டத்தில் அனைவரோடும் போட்டி போட்டுக் கொண்டு முன்னேறுகின்ற துணிவு அத்தகைய பிள்ளைகளுக்கு இயல்பாக இருப்பதில்லை. வாழ்க்கையின் இறுதிப்படி வரை அவர்கள் அடக்க ஒடுக்கமாகவே இருந்து, தங்கள் தங்கள் ஊர்களிலேயே வாழ்ந்து காலந்தள்ளி விடுகிருர்கள். நம்மவர்களில் பெரும்பாலார்க்குத் தங்கள் ஊர்களைத் தவிர வேறு ஊர்களே தெரியாது. அங்கு வாழும் மக்களையெல்லாம் ஏதோ அயல்நாடுகளில் வாழும் மக்களாகவே கருதி விடுகின்றனர். பக்கத்து ஊர்களையும் போய்ப் பார்த்தறியாத மக்கள் நம்மில் மிகப் பலர்.

இந்த நிலைகள் எப்பொழுதும் தவருனவை. நாம் பரந்து பட்டு வாழக் கற்றுக் கொள்ளல் வேண்டும். படித்து விட்டு ஒரே இடத்திலேயே வேலை தேடிக் கொண்டிருக்கக் கூடாது. அயல் ஊர்களுக்கும், அயல் மாநிலங்களுக்கும், முடிந்தால் அயல்நாடுகளுக்கும் போய் வேலை செய்யத் துணிவு கொள்ளல் வேண்டும். நம் வாழ்க்கை முழுவதும் நம் உற்ருர் உறவினர்களையே பார்த்துக் கொண்டு, கிணற்றுத் தவளைகளாக இருப்பது நம் முன்னேற்றத்தைப் பலவழிகளிலும் தடை செய்து விடும். நம் இனத்தையும் பின் தங்கிய ஓர் இனமாகச் செய்து விடும்.

பெற்ருேர்கள் தங்கள் பிள்ளைகளை எந்த ஊரிலும், அல்லது எந்த மாநிலத்திலும், அல்லது எந்த நாட்டிலும் உள்ள மக்களுக்கு மணஞ் செய்து கொடுக்கத் தயங்கக் கூடாது. முடிந்தால் அயல் இனங்களிலும், அயல் மதங்களிலும் உள்ள மக்களை உறவினர் ஆக்கிக் கொள்ளல் வேண்டும். அப்பொழுதுதான் சாதி, சமய வேறுபாடற்ற ஒரு மக்களினத்தை நாம் உருவாக்க முடியும். மொழி இதற்கு ஒரு தடையில்லை. ஒவ்வொருவரும் தம் தாய்மொழியைத் தம் வீட்டுமொழி

எதிரெதிரான கருத்துகள்!

(நாட்டுப் பழமொழிகள்)

0 பணமிருந்தால் உன்னை உனக்குத் தெரியாது;
பணமில்லாவிட்டால் உன்னை யாருக்கும் தெரியாது.
இசுப்பெயின்.

0 சிரிக்கிற பெண்ணையும் அழுகிற ஆணையும் நம்பாதே.
உருசியா.

0 முறிந்த கையைக் கொண்டு உழைக்க முடியும்; ஆனால்
உடைந்த உள்ளத்தைக் கொண்டு உழைக்க முடியாது. சயாம்.

0 தந்தையின் நற்குணம் மலையைவிட உயரமானது;
தாயின் நற்குணம் கடலைவிட ஆழமானது. சப்பான்.

0 சொன்ன சொல்லையும் எறிந்த கல்லையும் திருப்பியழைக்க
முடியாது. இங்கிலாந்து.

0 மனச்செருக்கால் 'இல்லை'யென்று சொல்லாதே-அல்லது
மனத்தளர்வினால் 'சரி'யென்று சொல்லி விடாதே! இசுப்பெயின்.

0 பெண் கையில் கொடுத்த பணம் தங்காது;
ஆண் கையில் கொடுத்த குழந்தை வாழாது. சப்பான்.

0 இளமை நம்பிக்கையில் வாழ்கிறது;
முதுமை பழைய நினைவில் வாழ்கிறது. பிரான்சு.

0 ஏழ்மையின் காரணமாக உன்னைத் தாழ்த்தாதே;
செல்வத்தின் காரணமாக உன்னை உயர்த்தாதே! இசுப்பெயின்.

0 தீய செயலைப் பனிக்கட்டியின் மேல் எழுது;- ஆனால்
நல்ல செயலைப் பாறையின் மேல் எழுது. எசுத்தோனியா.

0 உடம்பே! நீ தேய்ந்துபோ;
உள்ளமே நீ உறுதியாக இரு. ஆஃப்ரிக்கா.

தொகுப்பு:—**இளந்தமிழன்.**

(முன் பக்கத் தொடர்ச்சி)

யாகவும், தாம் வாழப்போகும் இடத்தில் உள்ள அயல்மொழியைத் தம் வினைமொழியாகவும் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். நம்மைப் பொறுத்த அளவில் நம் தமிழ் நாட்டிற்குள்ளேனும் நாம் பரந்து பட்டு வாழக் கற்றுக் கொள்ளுதல் எல்லா வகையிலும் நலம் பயக்கும்.

—பெருஞ்சித்திரன்.



வெங்கதிரும் மேற்கில்போய்
விழப்போ கும்மாலை!
எங்கும் இருள்வெள்ளம்
ஏறிவரும் நந்நேரம்!
அந்நேரந் தன்னில்
அரிமா துயில்களைந்து
குன்றோரம் வந்தாங்கோர்
குத்துக்கல் மீதமர்ந்து,
காடே நடுநடுங்கக்
காது படபடக்க

ஏடுவிளக் காத
இடிமுழக்கம் செய்ததுவே!
பெண்கழுதை நெஞ்சைப்
பிளந்ததுபோல் அஞ்சியதால்
மண்தரையில் வந்ததன்முன்
மண்டியிட்டுக் கொண்டதுவாம்!
அக்கால் களிறிரண்டும்
ஆங்குவந்து நின்றனவே!
முக்கால் முகந்திருப்பி
முன்னின்ற காட்சியினைக்

கண்ட கழுதைக்குக்
கண்ணிரண்டும் மங்கியது!
மண்டை கனத்ததுவாய்
மாய்மனம் பொங்கியதாய்
'ஓ'வென்ற பேரிரைச்சல்
காதில் ஒலிப்பதுவாய்

'ஆ'வென்று கூச்சலிட்டே,
"அம்மா, மகளே, நீ
வந்தாயா? எங்கிருந்தாய்?
வாழாத போக்கிலி நான்!

நொந்தாயா? உன்னை
நொடியில் இழந்தேனே!
எங்குநீ போயிருந்தாய்?
என்னஇடர் பட்டாயோ?
எங்குத் துயின்றாயோ?
எப்படித்தான் வாழ்ந்தாயோ?
ஐயகோ, உன்னை
அணுஅணுவாய்க் கொன்றேனே!
உய்யாத முண்டம்நான்!
உன்னைவிட்டுப் போனேனே!

வா, மகளே! வா"—என்றே
வாய்படக்கக் கூறியதாய்
'ஓ'வென் றழத்தொடங்கி,
ஓடிவந்து, வெங்களிற்றின்
மேலிருந்த குட்டியினை
மேலணைக்கத் தாவியது!
காலெழுந்து தாவிக்
கழுதையின்பால் குட்டிவந்து
நின்றதுவும் பெண்கழுதை
நீள்முகத்தால் மேனியெல்லாம்

தின்பதுபோல் மோந்து, மனந்
தீராத தாயன்பால்
குட்டிமுகத் தோடேதன்
கூம்புமுகந் தேய்த்தபடி
ஒட்டிவைத்துக் கொண்டே
உலகை மறந்ததுவாம்!
ஆன்ற சிலநொடியவ்
வாறிருந்த பெண்கழுதை
ஊன்றும் நினைவால், முன்
உள்ளவற்றைப் பார்த்ததுவே!

(தொடரும்)

நன்றியுள்ள 'தால்பின்'

தலைப்பைப் பார்த்தவுடன் ஏதோ குழந்தைக்கான அறநெறிக் கதை என்று நினைக்கலாம். ஆனால் இஃது ஓர் உண்மை நிகழ்ச்சி.

தால்பின் மீனைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவை அறிவுள்ளனவ; நன்றியுள்ளவை என்று பலர் கூறுவதுண்டு. அந்தத் தால்பின்கள் பற்றிய ஓர் உண்மைக் கதை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

'புக்சா' என்ற மீன் பிடிக்கும் கப்பல் கடலின் ஒரு புறத்திலிருந்து மீன் இருக்கும் பகுதியை நோக்கிச் சென்று கொண்டு இருந்தது. திடீர் என்று கப்பலின் முன் ஒரு தால்பின் மீன் தோன்றியது. அது கப்பலின் முன் துள்ளித் துள்ளிக் குதித்தது. கப்பலைத் திருப்பிச் செல்லும்படி கூறுவதுபோல இருந்தது அதன் நடவடிக்கை. கப்பலின் வேகம் குறைக்கப்பட்டது. அப்போது அதன் பின்புறம் மற்றொரு தால்பின் தோன்றிற்று.

கப்பல் திரும்பியது. இரு தால்பின்களும் கப்பலுக்கு முன்னே வழிகாட்டிகள் போலச் சென்றன. அந்த மீன்கள் கிச்சிலி (ஆரஞ்சு) நிறமுள்ள மிதப்பான் ஒன்று இருந்த இடம்வரை கப்பலை அழைத்துச் சென்றது. கப்பலின் மீகாமன்கள், மிதப்பானுடன் யாரோ விரித்திருந்த வலையை வெளியே எடுத்தனர். அப்போது அவ்வலையில் மற்றொரு தால்பின் அகப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டனர். அவர்கள் அந்தத் தால்பினை எடுத்துக் காப்பாற்றினர். இதோடு கதை நின்றுவிடவில்லை.

இந்த மூன்று தால்பின்களும் மேலும் தங்களைத் தொடர்ந்து வருமாறு கப்பல் மீகாமன்களுக்குச் செய்கைகள் காட்டின. எனவே மூன்று தால்பின் மீன்களும் வழிகாட்ட கப்பல் பின் தொடர்ந்தது. அரை மணி நேரம் சென்றது. ஏராளமான மீன்கள் உள்ள பகுதிக்கு அந்தத் தால்பின்கள் கப்பலை அழைத்துச் சென்றன. உடனே அங்கு வலை வீசப்பட்டது. அன்று அக்கப்பலுக்கு நல்ல வேட்டைதான்! நிறைய மீன்கள் கிடைத்தன.

இந்த மீன்பிடிக்கும் பருவத்தில் பலமுறை இக் கப்பல் செல்லும் போதெல்லாம் மூன்று தால்பின்களும் வெளியே வந்து எங்கெல்லாம் மீன்கள் கூட்டமாக உள்ளனவோ அப் பகுதிகளுக்குக் கப்பலை இட்டுச் சென்று கப்பல் தலைவருக்கு வழிகாட்டியாக இருந்தனவாம்!

[நன்றி: சோவியத்துச் செய்தி]

"தெரிந்து கொள்ளுங்கள்"

0 ஆங்கிலத்தில் இலக்கக் கணக்கான சொற்கள் இருந்தாலும் அவற்றில் பெரும்பாலானவை பிறமொழிகளிலிருந்து கடன் பெற்றவையே. காய் என்ற சொல்லுக்கு ஆங்கிலத்தில் பழுக்காத பழம் (unriped fruit) என்று தான் குறிப்பிடுகின்றனர். காய் என்ற சொல்லை விளக்க ஆங்கிலத்தில் சொல்லே இல்லை. அது போலவே, வெயில் என்ற சொல்லுக்கும், சொல்லில்லை.

0 உலகிலுள்ள உயிரிகளில் மிக உயரமானது ஒட்டகச் சிவிங்கி-தான். இஃது இருபது அடிவரை உயரமிருக்கும். இவை ஆப்பிரிக்காவில் அதிகமாக வாழுகின்றன.

0 சீனர்கள் அச்சிடும் முறையையும், மரக்கட்டைகளில் பெரிய அளவில் எழுத்துகளையும் உலகுக்கு முதன்முதலில் அறிமுகப் படுத்தினுலுங்கூட, செருமானியர்களே கி. பி. 1450 ஆம் ஆண்டில் மாழை (Metal)களால் சிறிய அளவில் அச்செழுத்துகளை உருவாக்கிக் கோவைப்படுத்தி அச்சிட வழி காட்டினர். தாளையும் (paper) முதன் முதல் செய்தவர்கள் சீனர்களே. மாந்த உடலில் அரத்த ஓட்டமுள்ளதை முதலில் உலகுக்கு அறிவித்தவர்களும் சீன அறிஞர்களே!

0 சிறுவர்களின் பிஞ்சு உடல் வருந்தி, வாடிப் பணியாற்ற வேண்டிய நிலை உலகெங்கிலும் பரவலாகக் காணப்படுகின்றது. இந்நிலை மிக வருந்தற்பாலதாகும். 14-அகவைக்குட்பட்ட, 40 கோடி சிறுவர்கள் இன்றைய உலகில் பலவகையான தொழில் களைச் செய்து பிழைக்கின்றனர்.

0 பண்டு தொட்டு இன்றுவரைக் காணும் உயிரிகளில் வௌ-வாலும் ஒன்று. வௌவால், இலக்கியங்களில் வாவல் என்றே குறிக்கப் பெறுகிறது. பழந்தின்னும் வாவல்களின் பற்கள், பழத்தின் சாற்றை உறிஞ்சிட ஏந்தாக அமைந்துள்ளன. வாவல்களுக்கு இருபதிலிருந்து முப்பத்தெட்டு வரை பற்களிருக்கின்றன.

தொகுப்பு: **நா. எழில். மகிழ்நன்.**

கணக்குப் புதிர்கள்.

—தமிழரிமா.

1. ஓர் எண்ணிலிருந்து இரண்டைக் கழித்து அதை நான்கால் பெருக்கினுல் வரும் விடையானது அவ்வெண்ணைப் போல் மூன்று மடங்காகும். அவ்வெண்ணைக் கண்டுபிடி.

2. ஒரு தந்தையும் மகனும் கடற்கரையில் உலவச் சென்றனர்: சிறிது உலவியபின், மணலில் காற்ருட அமர்ந்தனர். அமர்ந்த இடத்தில் மூன்று சிறிய குச்சிகள் கிடந்தன. அம்மூன்று குச்சிகளைப் பயன்படுத்தி, மகன்தன் அகவையை அமைத்துத் தன் தந்தையிடம் காட்டினுன். உடனே தந்தை அதே மூன்று குச்சிகளைப் பயன்படுத்தி, அவர், தன் அகவையை அமைத்துக் காட்டினுர். அப்படியெனின் தந்தை, மகன் அகவை என்ன ?

(விடை: 16 ஆம் பக்கம் பார்க்க)

குட்டிக் கதை:

முயலும் ஆமையும்!

ஒரு முயலும் ஆமையும் ஒரு முட்டைக்கோசு இலையைக் கண்டன.

நாம் இதைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம். ஆனுல், ஒன்று செய்யலாம்: தன்னுடைய வீட்டுக்கு ஓடிப்போய்விட்டு முதலில் திரும்பி வருகிறவர், இதை எடுத்துக் கொள்ளலாம்." என்றது முயல்.

"சரி" என்றது ஆமை.

"அப்படியானுல், இந்த இலை எனக்குத்தான். ஏனென்ருல் உன்னைவிட நான் வேகமாக ஓடுவேன். வீட்டுக்கு ஓடிப் போய்விட்டு முதலில் திரும்பி விடுவேன்." என்று துள்ளிக் குதித்தது முயல்.

"உன்னுல் முடியாது: ஏனென்ருல், என் வீடு இங்கேயே என் முதுகில்தான் இருக்கிறது, என்றது ஆமை.

ஒய்-இசுதீபனேவு.

உழைத்துச் சம்பாதித்த பணம்.

—ஏ. கபர்தினியன்.

முன்னொரு காலத்தில் ஒருவர் இருந்தார். காலை முதல் மாலை வரை அவர் உழைப்பார். அவருக்குச் சோம்பேறிப் பையன் ஒருவன் இருந்தான். அவன் ஒரு வேலையும் செய்ய மாட்டான். மற்றவர்கள் சமைக்கும் உணவை நன்கு உண்பான்; பல வகையான ஆரவார ஆடைகளை அணிவான். தகப்பன் சம்பாதித்த பணத்தைத் தன் விருப்பப்படி வாரியிறைத்து வந்தான். மகனின் இப்போக்கைக் கண்டு தந்தை வருத்தமடைந்தார். மகனுக்கு எப்படியாவது அறிவு புகட்ட வேண்டும் என முடிவு செய்தார். மகன் பாடுபட்டு உழைக்க வேண்டும், பணத்தை வீண் செலவு செய்வதை நிறுத்த வேண்டும் என்று தந்தை எண்ணினார். எனவே, மகனை அழைத்துக் கொண்டு அடுத்த ஊருக்குச் சென்றார். அங்கு ஒருவரிடத்தில் மகனை வேலைக்கு அமர்த்தினார்.

சோம்பேறி மகனுக்கோ வேலை செய்யச் சிறிதும் விருப்பம் இல்லை. ஆனால் தந்தையின் செயலையும் தடுக்க முடியவில்லை. இந்தச் சோம்பேறிப் பையன் செல்வக் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதை அறிந்த அவன் முதலாளி, "என்னுடைய மற்ற பணியாட்களைப் போல நான் ஏன் இவனை வேலை செய்யச் சொல்ல வேண்டும்? ஒரு வேளை வேறு ஏதோ காரணத்திற்காக இவனுடைய தந்தை இவனை இங்கு விட்டு வைத்திருப்பாரோ! இவனிடம் மிகுந்த வேலை வாங்கினால் இவனுடைய தந்தை வருத்தப்பட்டுக் கொண்டால் என்ன செய்வது?"—என்று எண்ணினார்.

எனவே அவர் அந்தச் சோம்பேறிப் பையனுக்கு வேலை கொடுக்கவில்லை. மாறாக, அவனுக்கு நல்ல சாப்பாடு போட்டார்; அழகான உடைகளைத் தந்தார்.

ஓராண்டு கழிந்தது. அந்தச் சோம்பேறிப் பையனிடம் ஒரு தங்கக் காசைக் கொடுத்து, அவனை வீட்டுக்கு அனுப்பினார், அந்த முதலாளி.

அவன் வீட்டிற்கு வந்ததும், தந்தை "நீ கடினமாக வேலை செய்தாயா?" என்று மகனைக் கேட்டார்.

"ஆம், அப்பா".

"உனது வேலைக்குப் பணம் கிடைத்ததா?"

"கிடைத்தது"

"என்ன கிடைத்தது? காட்டு பார்க்கலாம்."

தங்கக் காசைத் தந்தையிடம் கொடுத்தான் மகன். அதைக் கண்ணெடுத்தும் பார்க்காமல் அப்படியே ஆற்றில் வீசியெறிந்தார் தந்தை. மகனோ, அதைப் பொருட்படுத்தவே இல்லை. தந்தையின் வியப்பான செயலைக் கண்டு அவன் பதற்றமடையவும் இல்லை.

"நல்லது மகனே, இன்னும் ஓராண்டு வேலை செய்ய வேண்டும் நீ" என்று கூறினார் தந்தை. பிறகு வேறோர் ஊருக்கு மகனை அழைத்துக் கொண்டு போனார். அங்குள்ள வேறு ஒருவரிடம் வேலைக்கு அமர்த்தினார். இவரும் முன்னைய முதலாளி நினைத்தது போலவே "ஒருகால் நான் எப்படிப்பட்டவன் என்பதை அறிவதற்காகவே இந்தச் சோம்பேறிப் பையனை இங்கு அனுப்பி இருக்கலாம். எனவே இவனிடம் நான் வேலை வாங்கப் போவதில்லை. இல்லாவிட்டால், நான் கொடுமையானவன்; இரக்கமற்றவன் என்று இந்தச் சோம்பேறி பிறகு தந்தையிடம் கூறினாலும் கூறுவான்"—என்று நினைத்தார். எனவே அவர் அச் சோம்பேறிப் பையனுக்கு நிறையச் சலுகைகள் தந்தார். அவனுக்கு வேலை செய்ய விருப்பம் இருந்தால் செய்யலாம். இல்லாவிட்டால், சும்மா இருக்கலாம். ஆனால் வேளைக்கு வேளை நல்ல சாப்பாடும், உடுத்த அழகான உடைகளும் கிடைத்தன.

ஓராண்டு கழித்து அவரும் முன்னவர்போலவே அந்தப் பையனிடம் ஒரு தங்கக் காசைக் கொடுத்து, வீட்டிற்கு அனுப்பி விட்டார்.

மகன் வீட்டிற்கு வந்ததும், தந்தை முன்பு போலவே தங்கக் காசை வாங்கி ஆற்றில் வீசினார். இப்போதும் மகன் பேசாமல் இருந்தான். "இதில் ஏதோ தவறு இருக்கிறது, நான் நினைத்தபடி செயல்கள் நடக்கவில்லை" என்று எண்ணிய தந்தை, மீண்டும் வெகு தொலைவில் உள்ள ஓர் ஊருக்கு மகனை அழைத்துக் கொண்டு போய் அங்குள்ள வேறு ஒருவரிடம் வேலைக்கு அமர்த்தினார்.

அப்பொழுது புதிய முதலாளியைப் பார்த்து அவன் தந்தை, "நீங்கள் பெரிய பணக்காரர் இல்லை என்பதை நான் அறிவேன். எனவே உங்களிடம் சம்பளம் எதையும் நான் கேட்கவில்லை. பையனுடைய வயிற்றுப்பாடு கழிந்தால் போதும்" என்றார்.

"இவனை இங்கு அழைத்து வந்ததற்கு ஏதோ சிறப்பான காரணம் இருக்க வேண்டும்" என்று எண்ணிய புதிய முதலாளியும், அன்றிலிருந்தே இளைஞனுக்கு வேலை கொடுக்கத் தொடங்கி விட்டார். இருட்டிய பிறகுதான் அவனுக்குச் சாப்பாடு போடப்பட்டது. புதிய முதலாளி முன்காலையில் எழுந்து மாலைவரை ஓய்வு இன்றி வேலை செய்வார். அதேபோல் பையனையும் ஓய்வு இன்றி வேலை செய்ய வைத்தார். பையனுக்கு மிகவும் துன்பமாக இருந்தது, அவன் முணுமுணுத்தான்; புலம்பினான். அவனுக்கு வெயர்த்துக் கொட்டியது. ஆனால் முதலாளியோ எதையும் கவனிக்காததுபோல் இருந்து விட்டார். மாறாக, "இங்கேபார், நான் எவ்வளவு கடினமாக வேலை செய்கிறேன். நீயும் என்னைப்போல் வேலை செய்ய வேண்டும்" என்று அடிக்கடி கூறி வந்தார். இதற்கு விலக்கே கிடையாது என்பதை உணர்ந்த இளைஞன், கடினமாக வேலை செய்யப் பழகி விட்டான். அவனைச் சில சமயங்களில் கடுமையாகத் திட்டிவந்த முதலாளி இப்போதெல்லாம் இளைஞனின் வேலையைப் புகழவும் தொடங்கினார். இப்படி ஓராண்டுக் காலம் இளைஞன் கடினமாக உழைத்தான். அவனுடைய கைகள் காய்த்து விட்டன. மடிப்புக் கலையாமல் இருந்த அவன் உடைகள் அழுக்கடைந்து கிழிந்து விட்டன.

ஓராண்டு கழிந்தது. "உன் தந்தை, வேலைக்கு கூலி ஏதும் கேட்கவில்லை. இருப்பினும், நீ கடினமாக உழைத்ததால் உன்னை வெறுங் கையுடன் அனுப்ப முடியாது. எனவே, இந்த இரண்டு தங்கக் காசுகளை எடுத்துச் செல்," என்றார் முதலாளி.

மகன் திரும்பி வந்ததும் தந்தை மெல்லச் சிரித்த வண்ணம் "மகனே, நன்கு வேலை செய்தாயா?" என்று கேட்டார்.

"ஆம்" என்றான் பையன்.

"ஏதாவது சம்பளம் கிடைத்ததா?" என்று மீண்டும் வினவினார்.

"என் முதலாளி இரண்டு தங்கக் காசுகளைக் கொடுத்தார்." என்று கூறியபடி காசுகளைத் தகப்பனிடம் கொடுத்தான் மகன். அக்காசுகளை ஆற்றில் எறிவதற்காகக் கைத் தூக்கினார் தந்தை; மகன் ஓடிச் சென்று, அவர் கையைப் பிடித்துத் தடுத்தான்.

"ஏன் தடுக்கிறாய்?" என்று தந்தை சீறினார்.

செவ்வாயில் உயிரினங்கள்?

—போரிசு கோனவலோவு.

செவ்வாய்க் கோளில் குறுக்கும் நெடுக்குமாகச் செல்லும் "வாய்க்கால்கள்" கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து, அக்கோளில் உயிரினங்கள் இருக்கக் கூடுமோ என்ற ஐயம் வலுப்பட்டு வருகிறது. "வாய்க்கால்கள்" வெட்டும் அளவுக்கு, அறிவுள்ள உயிர்கள் அங்கு இருக்கக்கூடும் என்று எவரும் ஐயுறவில்லை. ஆனால், இதுகாறும் நாம் அறிந்திராத நுண்ணுயிர்ப் பொருள்கள் ஏதேனும் இருக்கக் கூடும் என்பதுதான் அறிவியலறிஞர்களின் கருத்து. ஏனெனில் செவ்வாய்க் கோளிலுள்ள வெப்பநிலை. வளி மண்டிலம் ஆகியவற்றைப் போன்று, இந்நிலத்திலேயே ஓர் அறையினுள் நிலைமைகளைத் தோற்றுவித்து, அதில் சில நுண்ணுயிர் அணுக்களை வைத்துப் பார்த்தபோது அவை சாகாமல் உயிர்வாழ்கின்றன என்பது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.

அக்கோளில் உயிரினம் இருக்க முடியாது என்று கருதுவதற்கான ஒரு காரணம், அக்கோளைச் சுற்றி 'ஓசோன்', வளி மண்டிலம் இல்லை என்பதுதான். நமது நிலவுலகைச் சுற்றி 'ஓசோன்' வளிப்படலம் இருப்பதால், அது கதிரவனிலிருந்து வரும் உயிர்ப் பொருளுக்கு ஏதத்தை விளைவிக்கக்கூடிய புற ஊதாக் கதிர்களைத் தடுத்து நிறுத்தி விடுகின்றது. சூரிய ஒளியிலுள்ள புற ஊதாக் கதிர்கள்

(11-ஆம் பக்கத் தொடர்ச்சி)

"அப்பா அந்தக் காசுகளைத் தண்ணீரில் எறியாதீர்கள். மிகவும் கடினமாக உழைத்து அவற்றை நான் சம்பாதித்தேன்" என்று அலறினான் மகன்.

தந்தை சிரித்தார்.

"மகனே! இந்தக் காசுகள் உண்மையாகவே நீ உழைத்துச் சம்பாதித்தவைதாம் என்பதை என்னால் உணர முடிகிறது. தொல்லைப்பட்டுச் சம்பாதித்த பணத்தை யாரும் வீணாக்க விரும்ப மாட்டார்கள். அதை இப்போது நீ புரிந்து கொண்டாய் என நினைக்கிறேன்; அப்படித்தானே?" என்றார் தந்தை.

"ஆம்; அப்பா புரிந்து விட்டது" என்றான் மகன்.

(சோவியத்துச் செய்தியில் வெளிவந்தது.)

மட்டும், நம் நிலத்தை வந்தடைந்தால், நாமெல்லாம் தோன்றி யிருக்கவே முடியாது. எனினும் அணு உலைகளிலும் பலவகை நுண் ணுயிரிகள் உயிர் வாழ்கின்றன என்பதை நாம் அறிவோம். அவை புற ஊதாக் கதிர் வீச்சிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற் கான தடுப்புச் சுவரொன்றைத் தாங்களே நிறுவிக் கொண்டிருக்கக் கூடும்.

செவ்வாய்க் கோளில் உயிர்வளி கிடையாது. ஆனால் உயிர்வளி தேவையில்லாத பலவகை நுண்ணுயிரிகளையும் நாம் அறிந்திருக் கிறோம். நீரின்றி உயிர்ப் பொருள் ஏதும் இருக்க முடியாது என்பதும், செவ்வாயின் வளி மண்டலத்தில் மிகச் சிறிதளவே நீராவி உள்ளது என்பதும் தெரிய வந்துள்ளபோதும், என்றுமே செவ்வாய்க் கோள் நீரற்றுத்தான் இருந்து வந்துள்ளதா என்பது கேள்விக்குரிய செய்தி!

அமெரிக்க விண்வெளிக் கலமான 'மாரினர்-9' சோவியத்துத் துணைக்கோளான 'மார்சு-5' ஆகியவை நிலவுலகுக்கு அனுப்பிய புகைப்படங்களிலிருந்து, வறண்ட ஆற்றுப் படுகைகளைப் போன்ற பல தோற்றங்கள் தெரிய வந்துள்ளன. வெகுகாலத்திற்கு முன்னர் செவ்வாய்க் கோளில் ஒரு வேளை நிலைமைகள் வேறு வகையாக இருந்திருக்கக் கூடுமன்றோ?

ஒவ்வொரு 100,000 ஆண்டுக் காலத்திற்கு ஒருமுறை செவ்வா யின் கால நிலை கடுமையான மாற்றத்திற்குள்ளாகிறது என்று சிலர் உணர்கின்றனர். வடமுனைப் பனிப் பாறை உருகி, நீர் ஆறாக ஓடிற்று என்றும் அதுவே ஆவியாகி, வளி மண்டலத்தை அடர்த்தி நிறைந்ததாக ஆக்கிற்று என்றும் அவர்கள் கூறுகின்றனர். அப் பொழுது, வெகு காலமாக உறங்கிக் கிடந்த செவ்வாய்க் கோளின் உயிரினங்கள், உயிர் பெற்று எழுந்திருத்தல் வேண்டும். உயிர் வாழ்க்கைக்கு ஏந்தான கால கட்டம் முடிவடைந்ததும், அவை மீண்டும் உறக்கத்தில் ஆழ்ந்திருக்க வேண்டும். இதுதான் அவர்களது கருத்து.

இதை நாம் ஏற்றுக் கொள்வதாக இருந்தால்கூட, உயிரினம் முதன்முதல் அங்கு எப்படித் தோன்றிற்று? இது குறித்து சோவி யத்து அறிஞர்களில் ஒருவரான இலெவு முகின் என்பார் கீழ் வருமாறு கூறுகிறார்:

"பல கோடி ஆண்டுகளுக்கு முன்னர் நமது நிலத்தில் எத்தகைய சூழ்நிலை நிலவிற்று என்பதையே துல்லியமாக நம்மால் கூற முடியாதபோது, செவ்வாய்க் கோளைப்பற்றி நாம் என்ன கூற முடியும்? ஒரு காலத்தில் அங்கு நீர்நிலைகள் இருந்திருக்கக் கூடும்; இயற்கையான படிநிலை வளர்ச்சிப் போக்கின்படி உயிரினமும் தோன்றியிருக்கலாம்.

"விண்வீழ் கொள்ளிகளில் சில உயிர்க்கூற்றுப் பொருள்கள் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. அப்படியானால், உயிர்க் கூற்றுப் பொருள்களை, நமது நிலம் மட்டுமே தனக்கு உரியன என்று தனி உரிமை கொண்டாட முடியாது. செவ்வாய்க் கோளிலும் உயிர்க்கூற்றுப் பொருள்கள் இருந்திருக்கலாம்; அவற்றின் சிக்கல் நிறைந்த வளர்ச்சிப் போக்கின் காரணமாக உயிர்ப் பொருள்கள் தோன்றியிருப்பதும் இயல்வதே" என்று இலெவு முகின் கூறுகிறார்.

நமது நிலத்திற்கு வெளியே, புறவெளியில் ஏதேனும் உயிரினம் இருப்பதைக் கண்டுபிடிப்பது மாந்த குலத்திற்கே மிகமிக முதன்மை வாய்ந்ததாகும். நமது நிலவுலகின் உயிரினங்களைத் தவிர, நாம் இதுகாறும் வேறுவகையானவற்றைப்பற்றி எதுவும் அறியோம். பிற வகையான உயிர் அமைப்புகளையும், அவற்றின் படிநிலை வளர்ச்சிகள் பற்றிய விளக்கங்களையும் அறிய உயிரியலாளர்கள் துடித்துக் கொண்டு உள்ளனர். நம்மை விடவும் நெளிவு, சுழிவுடன் கூடிய, இயற்கையின் சீற்றங்களை வெற்றிகரமாக எதிர்த்து நிற்கும் திறன்படைத்த, உயிர் அணுக்கள் ஏன் இருத்தல் கூடாது? செவ்வாய்க் கோளை மேன்மேலும் ஆராய்ந்து வரும் அறிவியலார்கள் விரைவில் இதற்கான விடையை அளிப்பார்கள் என்று நாம் நம்பலாம். [சோவியத்துச் செய்தியில் வெளிவந்தது.]

தமிழ்ச்சிட்டு, சென்னை-5.

(தூயதமிழ்ச் சிறுவர் கலையிதழ்.)

		உள்நாடு	கொழும்பு	பிறவெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	உருபா	4-00	6-00	8-00
தனியிதழ்	,,	0-35	0-50	0-65

(அரையாண்டுக் கட்டணம் இல்லை.)

ஓரிதழுக்கு 75 காசு மேனி முன்பணம் கட்டக் கூடிய விற்பனை யாளர் எழுதிக் கேட்க!

பயன் மொழிகள்.

தொகுப்பு: **சி. நா. செந்தமிழ்ச் செல்வன்.**

0 உள்ளத் தூய்மை உள்ளவனால்தான் அமைதியும் இன்பமும் சூழ வாழ முடியும். —பால் இனியூமன்.

0 எதையும் கூர்ந்து கேட்பவர்கள் அறிவு செறிந்த கேள்விகட்கு விடையிருக்க வல்லவர்கள், —ஏங்கல்சு.

0 வாழ்க்கை சிலருக்கு நாடகமாகத் தோன்றுகிறது. நாடகம் சிலருக்கு வாழ்க்கையாகத் தோன்றுகிறது. —சர்ச்சில்.

0 நன்ருக வேய்ப்படாத கூரை வீட்டில் மழைநீர் புகுவதுபோல, பண்படுத்தப் படாத மனத்தில் தீய எண்ணங்கள் புகுந்து விடும். —புத்தர்.

0 மாந்தன் தன்னுடைய அறிவை எந்த அளவுக்குத் தன்னுடைய தொழிலோடு தொடர்புபடுத்திப் பார்க்கின்ருனே, அந்த அளவுக்கு அவன் வாழ்க்கையில் முன்னேறுகின்ருன். —இங்கர்சால்.

0 உறுதியுடைய நல்லோர்க்கு உலகம் வளைந்து கொடுக்கிறது. —கரம்பே.

0 துயரக் கடலில் மூழ்கிப் போகாமல் இருக்க தனது வாழ்க்கைப் படகில் ஆரவாரமென்னும் சுமையை மிகுதியாக ஏற்றிக் கொள்ளலாகாது. —இப்ரோச்சனல்.

0 கண்ணீரோடு கலக்கும்போதுதான் அன்பின் அழகு மிகுகிறது. —சர் வால்டேர் இசுகாட்.

0 ஒரு பொருள் இல்லாமற் போய்விடுமென்ற அச்சமில்லாவிட்டால் அதை வைத்துக் கொள்ள வேண்டுமென்ற ஆசை குறைந்து விடும். —அந்தோணி கிளேடர்.

0 தெரியாத ஒன்றைப் புகழ்வது தவறு; இகழ்வதோ அதைவிடத் தவறு. —வால்டேர்.

0 பேச்சைவிட எண்ணம் ஆழமானது; எண்ணத்தை விட உணர்ச்சி ஆழமானது. —சின்கிரான்சு

0 பசி, உழைப்பு, வெயர்வை ஆகியவையே நலமிக்க உடலின் அறிகுறிகள். —தேகால்.

0 வெள்ளி பேசுகையில் முட்டாள் கவனிக்கிருன்; தங்கம் பேசுகையில் அறிவாளி கவனிக்கிருன். —உவாங் சுவாங்.

0 புரட்சி என்பது நாகரிகத்தின் கரு. —விக்டர் கியூகோ.

0 அறிவின் முதல்வேலை தன்னை அறிதல்; அன்பின் முதல்வேலை தனக்குத்தான் போதுமானதாய் இருத்தல். —இரசுக்கின்.

பாருங்கல்!

— ஒரு நகரின் நடுவில் உள்ள சதுக்கத்தில் ஒரு பெரிய பாருங்கல் ஒன்று இருந்தது. அது நிறைய இடத்தை அடைத்துக் கொண்டது. போக்குவரத்துக்குப் பெரும் இடைஞ்சலாக இருந்தது. எனவே,பெரிய பெரிய பொறியாளர்கள் வரவழைக்கப் பெற்றனர். அக்கல்லே அங்கிருந்து அப்புறப்படுத்த எவ்வளவு பணம் செலவாகும் என்று அவர்களிடம் கேட்கப்பட்டது.

ஒரு பொறியாளர் கூறினர்: "இந்தக் கல்லே வெடிவைத்துச் சிறு துண்டுகளாக ஆக்க வேண்டும். பின்னர் சிறு கற்களை இங்கிருந்து எளிதில் அப்புறப்படுத்தி விடலாம். இதற்கு 8000 உருபா செலவாகும்" என்ருர்.

மற்ருெரு பொறியாளர் கூறினர்: 'இக் கல்லின் கீழ் ஓர் உருளையைப் பொருத்த வேண்டும். அந்த உருளையை வைத்து உருட்டி கொண்டு போய்க் கல்லே அப்புறப்படுத்தலாம். இதற்கு 6000 உருபா செலவாகும்" என்ருர்.

இவற்றையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஓர் உழவர், 'நான் ஒருவனே இக்கல்லே அப்புறப்படுத்துவேன். இதற்காக எனக்கு 100 உருபா கொடுத்தால் போதும்." என்று கூறினர்.

எப்படி அவரால் செய்ய முடியும் என்ற கேட்டபொழுது அவர், "கல்லே ஒட்டி மிகப் பெரிய பள்ளம் ஒன்றைத் தோண்ட வேண்டும். பின்னர் அந்தக் கல்லேப் பள்ளத்தில் தள்ள வேண்டும். பிறகு மண்ணைப் போட்டு மூடிவிட வேண்டும் என்ருர். அவர் அதன்படியே செய்தும் காட்டினர். உழவருக்கு அவர் கேட்ட 100 உருபாவுடன், அவரது சிறந்த கருத்துக்காக மேலும் 100 உருபாவும் வெகுமதியாக வழங்கப்பட்டது.

—இலியோ தால்சுதாய்.

கணக்குப் புதிர்கள்—விடைகள்.

1. ஓர் எண் = x என்க
அதிலிருந்து இரண்டைக் கழிக்க, வருவது (x-2) ஆகும்.
நான்கால் பெருக்கக்கிடைப்பது 4(x-2).
4 (x-2)—ஆனது, x இன் மும்மடங்குக்கு (3x) நிகர்.
$4(x-2)=3x; \quad 4x-8=3x; \quad 4x-3x=8; \quad x=8$
∴ தேவையான எண் = 8 ஆகும்.

2. தந்தையின் அகவை 71; மகனின் அகவை 17. ஆனல் உங்களில் சிலர் மகனின் அகவை 4 என்று கண்டுபிடித்திருக்கலாம். நான்கு வயதுச் சிறுவன் அத்தத அறிவாற்றலுள்ளவனயிருப்பது அரிது. ஆகவே அது பொருந்தாது. இன்னுஞ்சிலர் தந்தைக்கு 111 அகவை இருக்கலாமென்பர். 111-அகவையுள்ளவர்கடற்கரையில் உலவுதல் எப்படிச் சாலும்; சாலாது. ஆகவே 17,-ம், 71-ம்தான் பொருத்தமான விடையாகும்.

“அப்பா என்னை உயிரோடே
அழைத்துப் போக வேண்டுமெனில்
தப்பா மல்ஆ யிரம்உருபா
தரங்கம் பாடிக் கடற்கரையில்

வருப்ஞா யிற்றுக் கிழமையிலே
வைத்திட வேண்டும்; இச்செய்தி
ஒருவரும் அறிந்திடக் கூடாதே!
அறிந்தால் உயிரும் இருக்காதே”

—என்றே எழுதி விடுத்திருந்தான்!
இதனைப் படித்த பெற்றோர்கள்,
அன்றே நகைகளை விற்றார்கள்;
அந்தத் தொகையைச் சேர்த்தார்கள்!

பொன்னன் குறித்த அந்நாளில்
போனார் தந்தை தொகையோடு!
பொன்னன் வந்தான்; ஆயிரமும்
போனது போனது வீணாக!

பொன்னனைப் போலப் பிள்ளைகளும்
போவதும் எவர்பின், எங்கென்றே
முன்னறி வின்றிப் போவார்கள்!
முடிவில் தொல்லையும் வைப்பார்கள்!

வந்தவன் பின்னே சென்றதனால்
வந்தது தீங்கு! பெற்றோரும்
நொந்தனர்! ஆயிரம் உருபாவும்
நொடியில் பறந்து போனதன்றோ?

படிப்பறி விருந்தால் போதாது;
பட்டறி வோடே உலகறிவும்
படிப்பறி வோடு பயன்படுமாம்”
பாடம் பொன்னன் கதையாகும்!

கருத்துக் கதை-1.

காலம் முழுவதும் கற்றவர்!

ஓர் ஊரில் அறிஞர் ஒருவர் இருந்தார். அவருக்கு அகவை அறுபதுக்கு மேலிருக்கும். அவர் எப்பொழுதும் ஏதையாவது படித்துக் கொண்டேயிருப்பார். அவரிடம் ஒரு நூல் நிலையம் இருந்தது. காலை, பகல், மாலை, இரவு எல்லா நேரங்களிலும் அவர் அந்த நூல் நிலையத்தில் உட்கார்ந்து படித்தபடியே இருப்பார். அவர் நூல் நிலையத்தில் ஏராளமான அறிவு நூல்கள் இருந்தன. அவருக்குக் கிடைக்கும் பணத்திற்கெல்லாம் நூல்களையே வாங்கி அந்த நூல் நிலையத்தில் காத்து வைத்திருப்பார். அவர் திருமணமே செய்து கொள்ளவில்லை. எனவே அவருக்கு உற்றார் உறவினர்கள் எவருமே இல்லை.

அவர் சாப்பிடும் நேரம் போகத் தம் நூல் நிலையத்திலேயே அடைந்து கிடப்பார். இரவு நெடுநேரம் அவர் விழித்திருப்பார். அவர் தூங்குவது கொஞ்ச நேரமே, காலையிலோ மாலையிலோ அவர் உலாவப் போவதும் இல்லை. பொழுது போக்காக அவர் எதிலும் ஈடுபடுவதில்லை. அவர்க்குக் குடும்பமும், உறவினர்களும் அந்த நூல்களே! அவர் வான நூல்கள், நிலநூல்கள், உயிர் நூல்கள், மன நூல்கள், வரலாற்று நூல்கள் முதலிய எல்லாத் துறைகளிலும் வல்லவராய் இருந்தார்.

அவர் யாரிடமும் பேசுவதில்லை. மகிழ்ச்சியாகச் சிரித்து உரையாடுவதுமில்லை. அவருண்டு; அவர் நூல்களுண்டு என்ற அளவிலேயே அவர் வாழ்ந்து வந்தார். படிப்பதைத் தவிர வேறு எதிலும் அவர் கவனம் செலுத்தியதே இல்லை. அவரிடம் அறிவுச் செல்வம் குவிந்திருந்தது. ஆனால் அந்த அறிவுச் செல்வத்தை யாருக்கும் பகிர்ந்து கொடுத்ததே இல்லை. அவருக்கு அதற்கெல்லாம் நேரமில்லை என்று சொல்லிக் கொண்டிருந்தார். அவரிடத்தில் கற்க விரும்பிய மாணவர்கள் ஏராளமான பேர் வருவர். அவர்களையெல்லாம் அவர் ஏதேனும் சாக்குப்போக்குச் சொல்லி அனுப்பி விடுவார்.

அவர் வாழ்நாள் முழுவதும் கற்றார். கசடறக் கற்றார். கற்க வேண்டிய நூல்கள் அனைத்தையும் கற்றார். ஆனால் அவர் ஒருநாள் இறந்து போனார்.

அவர் முயற்சியால் திரட்டிய அறிவுச் செல்வம் யாருக்குமே பயன்படாமல் போய் விட்டது. அவருடைய மூளையில் குவிந்திருந்த அறிவுச் செல்வம் அவருடனேயே அழிந்து போனது. பொருட் செல்வம் உள்ளவர்கள் அவற்றை எல்லார்க்கும் பயன்படுமாறு செய்வதுபோல், அறிவுச் செல்வம் உள்ளவர்களும் அதை எல்லாருக்கும் பயன்படும்படி செய்ய வேண்டும். பொருட் செல்வத்தை வைத்துக் கொண்டு பயன்படுத்தாதவர் திருடர். அறிவுச் செல்வத்தை வைத்துக் கொண்டிருப்பவரும் அதைப் பிறருக்குப் பயன் படுத்தவில்லையானால் அவரும் ஒரு திருடரே; அறிவுத் திருடர்!

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. தமிழகம்.